www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# Kanchipuram Dt

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024

## பதினொன்றாம் வகுப்பு

நேரம்: 1.30 மணி வரலாறு மதிப்பெண்கள்: 50

பகுதி - அ

சரியான விடையைத் தேர்ந்தெடு:- 10×1=10

1) ஷா நாமா எழுதியவர் ________

அ) பிர்தௌசி ஆ) இபன் பதூதா

இ) நிக்கோலோ டி கோன்டி ஈ) டோமிங்கோ பயஸ்

2) பின்வருவனவற்றைப் பொருத்தவும்

அ) அப்துல் ரசாக் - 1. ரஷ்யா

ஆ) நிகிடின் - 2. சாளுவ நாயக்கர்

இ) டொமிங்கோ பயஸ் மற்றும் நூனிஸ் - 3. பெர்சியா

ஈ) செல்லப்பா - 4. போர்ச்சுகல்

அ) 1 2 3 4 ஆ) 4 3 2 1 இ) 2 1 4 3 ஈ) 3 1 4 2

3) மராட்டிய ஆட்சியாளர் சிவாஜியின் சமகாலத்தவர் ________ ஆவார்

அ) இராமானந்தர் ஆ) மீராபாய் இ) சூர்தாஸ் ஈ) துக்காராம்

4) கூற்று: மத சீர்திருத்தவாதிகள் ஒரு கடவுள் கொள்கையைப் போதித்தனர்

காரணம்: அவர்கள் சிலை வழிபாட்டை விமர்சித்தனர்

அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

ஆ) கூற்று தவறு ; காரணம் தவறு

இ) கூற்று சரி : காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்

ஈ) கூற்று தவறு ; காரணம் சரி.

5) மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழை இயற்றியவர் ________

அ) தாயுமானவர் ஆ) குமரகுருபரர் இ) இராமலிங்க அடிகள் ஈ) சிவப்பிரகாசர்

6) தவறான கூற்றினை கண்டுபிடி

அ) இந்தியா, பாரசிக மற்றும் இஸ்லாமிய கட்டிடக்கலையின் பாணியில் முகலாயரின் கட்டிடக்கலையின் மறுவடிவமாக தாஜ்மஹால் உள்ளது.

ஆ) அக்பரின் புதிய தலைநகரமான ஆக்ரா மற்றும் அதன் சுற்றுச்சுவர்களுக்குள் பல எழுச்சியூட்டும் கட்டடங்கள் உள்ளன.

இ) மோதி மசூதி முழுவதும் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டது.

ஈ) புராண கிலா ஒரு உயர்ந்த கோட்டையாகும்.

7) வலிமைமிக்க கொரில்லா போர் முறையை பின்பற்றியோர் ________

அ) மராத்தியர் ஆ) முகலாயர் இ) ஆங்கிலேயர்கள் ஈ) நாயக்கர்

8) ________ கோஹினூர் வைரத்தை எடுத்து சென்றார்.

அ) அஹமது ஷா அப்தலி ஆ) நாதிர் ஷா

இ) ஷுஜா-உத்-தௌலா ஈ) நஜுப்-உத்-தௌலா

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



9) மேற்கு ஆசியாவிற்கும், ஐரோப்பாவிற்கும் நுழைவுவாயிலாக இருந்த துறைமுகம் ______ ஆகும்.

அ) டையூ ஆ) கல்கத்தா இ) பம்பாய் ஈ) சூரத்

10) ______ தமிழ் அச்சுப்பதிப்பின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்

அ) இராபர்டோ டி நோபிலி ஆ) அல்போன்சோ டி அல்புகர்க்

இ) ஹென்ரிக்ஸ் ஈ) பிரான்சிஸ்கோ டி அல்மெய்டா

## பகுதி - ஆ

**ஏதேனும் ஐந்து கேள்விகளுக்கு விடையளிக்கவும்:-** **5×2=10**

11) தராப் பற்றி எழுதுக.

12) பக்தி இயக்கத்திற்கு இராமானுஜர் ஆற்றிய சேவைகள் யாவை?

13) சரஸ்வதி மஹால் நூலகத்தைப் பற்றி ஒரு குறிப்பை எழுதுங்கள்?

14) கார்டஸ் அமைப்பு என்றால் என்ன?

15) முகலாயர் காலத்தில் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சி பற்றி எழுதுக

16) முதலாம் முகமது பற்றி நீங்கள் அறிந்தது என்ன?

17) பக்தி இயக்கத்தில் ரவிதாஸின் பங்கினைப் பற்றி நீவிர் அறிவன யாவை?

## பகுதி - இ

**பின்வரும் ஏதேனும் ஐந்து கேள்விகளுக்கு விடையளிக்கவும்:-** **5×3=15**

18) "இரண்டாம் அலெக்சாண்டர்" என்று அழைக்கப்பட்டவர் யார்? ஏன்?

19) மத மறுமலர்ச்சியின் உறைவிடமாகத் தென்னிந்தியா விளங்கியதை விளக்குக.

20) தீன்-இலாஹி பற்றி நீவிர் அறிந்தது என்ன?

21) நயங்கரா முறை பற்றி எழுதுக.

22) நவ வித்யா முறையை அறிமுகம் செய்தது ஒரு முக்கிய முன் முயற்சியாகும். எவ்வாறு?

23) ஆனந்தரங்கர் நாட்குறிப்பு பற்றி எழுதுக.

24) கிழக்குக் கடற்கரையில் ஐரோப்பியர் தங்களது குடியேற்றங்களை நிறுவக்காரணம் என்ன?

## பகுதி - ஈ

**அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்கவும்:-** **3×5=15**

25) அ) முகமது கவானின் ஆட்சி முறை மற்றும் ராணுவ நிர்வாகம் பற்றி விவரி?

(அல்லது)

ஆ) பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகளை வரிசைப்படுத்துக.

26) அ) நவீன கல்வி முறைக்கு இரண்டாம் செரபோஜியின் பங்கினை விளக்குக.

(அல்லது)

ஆ) 1500-1550 வரையிலான ஆண்டுகளில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள் ஏதேனும் ஐந்தினை காலக்கோடிட்டுக் காட்டுக.

27) அ) கர்நாடகப் பகுதிகளில் ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சுக்காருக்கும் இடையே நடைபெற்ற போருக்கான காரணங்கள் யாவை? (அல்லது)

ஆ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பின்வரும் இடங்களைக் குறி.

ஹைதராபாத், தஞ்சாவூர், பூனா, சூரத், சென்னை

********

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com